**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 180/2022</u>**

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளியம்மாள் | வயது | 36 |
| த . பெ . (அ)க . பெ . | காளியப்பன் | தொழில் | கூலி |
| ஊர்/பணிபுரியுமிடம் | வெங்கடசமுத்திரம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.

நான் வெங்கடசமுத்திரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் சித்தாள் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கன்னிகா எனது அத்தை. வழக்கின் எதிரிகளை தெரியும். சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை. நான் சென்னையிலிருந்தேன். அப்போது எனது அத்தை அ,.சா.1 ஐ 1ம் எதிரி ராஜேந்திரன் அடித்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நிலப்பிரச்சனை காரணமாக அ.சா.1 மற்றும் 2 எனது அத்தை மற்றும் எனது அத்தை மகளை அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.,1 மற்றும் 2 ஆகியோரை வந்து பார்த்தேன். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**=

சம்பவம் நடக்கும் போது நான் சென்னையில் இருந்தேன் என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக தான் தகராறு நடந்ததாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். அ.சா.1 கன்னிகா என்னுடைய அத்தை. நானும், எனது தங்கை சுலோச்சானாவும் சேர்ந்து திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் ஒ எஸ் 220/2021 என்ற வழக்கை மேற்படி பிரச்சனைக்குரிய சொத்து சம்மந்தமாக எதிரி ராஜேந்திரன் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனைக்குரிய சொத்தை கன்னிகா எதிரி ராஜேந்திரனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்க தாக்கல் செய்த போது என்னுடன் கன்னிகாவும் வழக்கறிஞரை பார்க்க வந்தார் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன் என்றல் சரிதான். அங்குதான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்குமிடையே ஏற்கனவே

சிவில் வழக்கு இருப்பதாலும், அ.சா.1 என்னுடைய அத்தை என்பதாலும் அவருக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 180/2022</u>**

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | வயது | 23 |
| த . பெ . (அ)க . பெ . | பொன்னுசாமி | தொழில் | மேஸ்திரி |
| ஊர்/பணிபுரியுமிடம் | கல்லாவூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.

நான் கல்லாவூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கன்னிகா எனது அம்மா. அ.சா.2 பிரியதர்ஷினி எனது தங்கை. வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 24.12.2021 அன்று மாலை 6.00 மணியளவில் நான் சென்னையில் வேலையில் இருந்த போது 1ம் எதிரி ராஜேந்திரன் எனது அம்மாவை அறுவாளால் நெற்றி மற்றும் தலையில் வெட்டுக்காயம் ஏற்படுத்தியதாக போன் முலம் தகவல் சொன்னார்கள். நான் சென்னையிலிருந்து கிளம்பி மறுநாள் காலை ஊருக்கு வந்தேன். நான் மருத்துவமனையில் காலை 7.00 மணியளவில் எனது அம்மாவை பார்த்தேன். காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்ததன் பேரில் என்னை போலீஸார் எனது ஊருக்கு செல்லும்படியும் அவர்கள் வருவதாகவும் சொன்னார்கள். நான் ஊருக்கு சென்றேன், போலீஸாரும் வந்தார்கள். போலீஸார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நான் அதில் சாட்சியாக கையெப்பம் போட்டேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள **முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரியதன் பேரில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டு சம்பவயிடத்திலிருந்து வெட்டுக்கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் முலம் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் சாட்சி கையொப்பம் அதற்காக நான் போட்டேன் என்றால் சரிதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>=

மேற்படி சம்பவம் நடக்கும் போது நான் எனது அண்ணன் கோவிந்தராஜ் சென்னையில் மேஸ்திரி வேலை செய்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். நான் தகவல் தெரிந்து வந்து எனது அம்மாவை மருத்துவமனையில் பார்த்தேன் என்றால் சரிதான். பின்னர் புகார் அளிக்க காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். அப்போது மணி 12.00 இருக்கும். காவல் நிலையத்தில் விசாரித்தனர். அங்கு வாக்குமுலம் எடுக்கவில்லை. சம்பவயிடத்திற்கு செல்ல சொன்னார்கள். போலீஸார் சம்பவயிடத்திற்கு மாலை 6.00 மணிக்கு வந்தார்கள். அங்கு இரண்டு தாள்களில் எழுதிதான் கையெழுத்து வாங்கினார்கள். அப்போது 6.00 மணி இருக்கும். போலீஸ் விசாரணையில் நான் இதைதான் சொன்னேன். சொத்தை எனது அம்மா எதிரி ராஜேந்திரனுக்கு விற்ற விவரம் தெரியும். அது அடமானம் போல் போட்டது. அதை என் அம்மா திரும்ப கேட்கிறார் என்றால் சரிதான். எவ்வளவுக்கு அடமானம் என்று தெரியாது. காளிம்மாள் என் அம்மா ஆகியோர் ராஜேந்திரன் மீது சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் அம்மா சொல்லிதான் வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். ராஜேந்திரனுக்கு விற்ற சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் முன்பாக எந்த எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் அப்படி கைப்பற்றப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி. 180/2022</u>

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | வயது | 25 |
| த . பெ . (அ)க . பெ . | பொன்னுசாமி | தொழில் | மேஸ்திரி |
| ஊர்/பணிபுரியுமிடம் | கல்லாவூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.

நான் கல்லாவூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கன்னிகா எனது அம்மா. அ.சா.2 பிரியதர்ஷினி எனது தங்கை. அ.சா.4 முருகன் எனது தம்பி. வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 24.12.2021 அன்று மாலை 6.00 மணியளவில் நான் சென்னையில் வேலையில் இருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் ராஜேந்திரன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் எனது அம்மாவை அறுவாளால் நெற்றி மற்றும் தலையில் வெட்டுக்காயம் ஏற்படுத்தியதாக போன் முலம் தகவல் சொன்னார்கள். நான் சென்னையிலிருந்து கிளம்பி மறுநாள் காலை ஊருக்கு வந்தேன். நான் மருத்துவமனையில் காலை 7.00 மணியளவில் எனது அம்மாவை பார்த்தேன். காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்ததன் பேரில் என்னை போலீஸார் எனது ஊருக்கு செல்லும்படியும் அவர்கள் வருவதாகவும் சொன்னார்கள். நான் ஊருக்கு சென்றேன், போலீஸாரும் வந்தார்கள். போலீஸார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நான் அதில் சாட்சியாக கையெப்பம் போட்டேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரியதன் பேரில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டு சம்பவயிடத்திலிருந்து வெட்டுக்கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் முலம் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் சாட்சி கையொப்பம் அதற்காக நான் போட்டேன் என்றால் சரிதான். **கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>=

மேற்படி சம்பவம் நடக்கும் போது நானும், எனது தம்பியும் சென்னையில் மேஸ்திரி வேலை செய்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். என் முன்பாக போலீஸார் கத்தி எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே போலீஸார் வைத்திருந்த கத்திக்கு என்னிடம கையெழுத்து கேட்டதால் நான் போட்டேன் என்றால் சரிதான். மறுநாள் மாலை 5.00 – 6.00 மணியளவில் போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் தெரியவில்லை. எத்தனை மணிக்கு போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். போலீஸார் கையெழுத்து போடச்சொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். என் மாமா மகள் காளிம்மாள் என் அம்மா ஆகியோர் ராஜேந்திரன் மீது சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரனுக்கு விற்ற சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை